# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**ஆணைக்குழு சுற்றறிக்கை இல- 04/2020**

இல 20, வார்டு இடம்
கொழும்பு – 07
10 ஐப்பசி 2020

பல்கலைக் கழக உபவேந்தர்கள்
வளாக முதல்வர்கள்
நிறுவன பணிப்பாளர்கள்

**மாணவர்கள், ஆசிரியர் மற்றும் ஊழியர்களால் பல்கலைக் கழகங்கள், வளாகங்கள், நிறுவனங்களுக்கு பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பாக வழங்கப்பட்ட புகார்கள்**

பல்கலைக்கழகங்களை பாதிக்கின்ற மிகவும் முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றாக பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை உள்ளடங்கலான வன்முறை காணப்படுகின்றது. இதன் காரணமாக அரச பல்கலைக் கழகங்களில் ஆயிரக்கணக்கான புதுமுக மாணவர்கள் அவர்களுடைய சிரேஸ்ட மாணவர்களால் கொடுமைப்படுத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். பகிடிவதை என்ற மரபானது அடிமைப்படுத்தல், கீழ்பணிய வைத்தல் மற்றும் இணங்க வைத்தல் போன்ற கலாச்சாரங்களை திணிக்கின்றது. இதனால் சில மாணவர்கள் இத்தகைய வன்முறைகளுடன் இணைந்து செயற்பட முடியாமல் தங்களுடைய உயர்கல்வி கனவினை கைவிடுவதுடன் இன்னும் சிலர் தற்கொலை செய்து கொள்கின்றனர்.
சில வேளைகளில் மாணவர்கள் மட்டுமல்லாது ஊழியர்களும் கூட பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட ஒருவராக வாழ்நாள் முழுவதுமாக பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கவும் காரணமாக உள்ளது. இத்தகைய சம்பவங்கள் அறிக்கையிடப்படாமலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமலும் காணப்படுகின்றனர். இவற்றை தடுப்பதற்கு வேறுபட்ட மட்டங்களிலான வெற்றிகளுடன் பல்கலைக் கழகங்களினால் பல்வேறு அத்தியவசியமான நடவடிக்கைகள் முயற்சிக்கப்பட்டுள்ளன ஆனால் வன்முறைச் சகிப்புத்தன்மையற்ற சாதகமானதும் நிலையானதுமான நிறுவனம்சார் கலாச்சாரமொன்றை உருவாக்குவதில் தோல்வியடைந்து இருக்கின்றது.

எனவே அரச பல்கலைக் கழகங்களில் பாதுகாப்பானதும் உகந்ததுமான சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு மாணவர்கள், ஆசிரியர் மற்றும் ஊழியர்களால் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பாக பல்கலைக் கழகங்கள், வளாகங்கள், நிறுவனங்களிடம் வழங்கப்பட்ட புகார்களை சமர்ப்பிப்பதற்கு பல்கலைக் கழகங்கள், வளாகங்கள் மற்றும் நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கு 11ம் திகதி ஆனி மாதம் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆணைக்குழுவின் 1032வது கூட்டத்தில தீர்மானித்துள்ளது.

எனவே தங்களுடைய நிறுவனத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பாக வழங்கப்பட்ட புகார்கள் மற்றும் அவற்றுக்காக எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகளையும் சேர்த்து அத்தகைய புகார்கள் தங்களுடைய நிறுவனத்திற்கு கிடைக்கப் பெற்ற 07 நாட்களில் தலைவர், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தயவுசெய்து இது தொடர்பான நடவடிக்கை எடுக்கவும்.

.......................................
தலைவர்

**பிரதிகள்:**

1. செயலாளர் /நகர திட்மிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம்/ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
3. துணைத் தலைவர் / பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
4. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்
5. செயலாளர்/ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பல்கலைக் கழகங்களின் பதிவாளர்கள்
7. பீடங்களுக்கான பீடாதிபதிகள்
8. கணக்காளர்/ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக் கழகங்களின் நிதியாளர்கள்
10. உயர்கல்வி நிறுவனங்கள்/ கல்வி நிறுவனங்களின் நூலகர்கள் SAL/AL
11. வளாகங்கள்/ கல்விநிறுவனங்களின் துணைப் பதிவாளர்கள்/ சிரேஸ்ட உதவி பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள்

12. வளாகங்கள்/ கல்விநிறுவனங்களின் துணை நிதியாளர்கள்/ சிரேஸ்ட உதவி நிதியாளர்கள்/ உதவி நிதியாளர்கள்
13. உள்ளக கணக்காய்வாளர்/ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
14. பல்கலைக் கழகங்களின் அரசாங்க கணக்காய்வு கண்காணிப்பாளர்கள்
15. உயர்கல்வி நிறுவனங்களின் சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்கள்
16. வர்த்தக சங்கங்களின் செயலாளர்கள்
17. கணக்காய்வாளர் நாயகம்

கோவை இல: UGC/CGEE/PO_D-01